மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்புரை!

கீ.வ.குப்பத்தில் 'கலைஞரை பேசுவோம் வா' கருத்தரங்கம்!

சா.பரிமளம் - சி.கோபி - எல்.ரவிச்சந்திரன் பங்கேற்பு!

வேலூர், ஆக. 15 - வேலூர் மாவட்டம் கீ.வ.குப்பம் மத்திய ஒன்றியம், கீ.வ.குப்பம் கழக அலுவலகத்தில், தமிழின தலைவர் கலைஞரை பேசுவோம் வா...! எனும் தலைப்பில் மாலை நேர கருத்தரங்கம் நடைப் பெற்றது. இக்கருத்தரங்கிற்கு, கீ.வ.குப்பம் மத்திய ஒன்றிய கழக செயலாளரும், ஒன்றிய குழு தலைவருமான எல்.ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். முரசொலி தமிழ்மன்ற நிறுவனரும், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் மாநில துணை செயலாளருமான சி.கோபி முன்னிலை வகித்திட, முன்னாள் பொதுகுழு உறுப்பினர் மற்றும் மாவட்ட இலக்கிய அணியின் அமைப்பாளர் சா.பரிமளம் வரவேற்புரை ஆற்றினார்.

ஒன்றிய கழக செயலாளர்களான, கே.சீதாராமன் (கீ. வ. குப்பம் ஒன்றியம், ஆர்.முருகேசன் (கீ.வ. குப்பம் கிழக்கு ஒன்றியம்), வாழ்த்துரை வழங்க, மாவட்ட இலக்கிய அணி தலைவர் குடியாத்தம் அன்பு, மாவட்ட கலை இலக்கிய பேரவையின் தலைவர் கே.கே. கருணாநிதி, அமைப்பாளர் கிருபாகரன் ஆகியோர் துவக்க உரையாற்றினார்கள். முடினாம்பட்டு கே.குப்பன், பி. கருணாநிதி, ஜி. இளங்கோ, உதயசூரியன்,கவசம் பட்டு ச.மணிகண்டன் ஆகியோர் நிகழ்வை ஒருங்கிணைக்க, திராவிட நட்புக்கழகத்தை சேர்ந்த சா.குமரன், காவனூர் மு.பிரபு ஆகியோர் நிகழ்வை,தொகுத்து வழங்கினார்கள். சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு தலைவர் கலைஞர் அவர்களின் திருவுரு வப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர்தூவி வணங்கி விட்டு, சிறப்புரையாற்றினர். கலைஞரை பேசுவோம் வா...! எனும் தலைப்பில் தலைமை கழக பேச்சாளர்களான சேர்க்காடு கென்னடி, குடியாத்தம் கவிஞர் த.பாரி, பேர்ணாம்பட்டு பழ. இராசேந்திரன் ஆகியோர் உரைவீச்சு செய்தார்கள்.

இந்நிகழ்வில், தலைமை பொது குழு உறுப்பினர்கள் கே.தயாளமூர்த்தி, வி.டி.சிவக்குமார், ஒன்றிய குழு துணைத்தலைவர் பாரதி வெங்கடேசன், நிலவள வங்கியின் தலைவர் வி.ஜெயராஜ்,மாவட்ட கவுன்சிலர்கள் எம்.அசோக்குமார், கவிதா சுதாசேகர், ஒன்றிய அவைத்தலைவர், இரா.தாமோதரம் கட்டுக்கல் பாஸ்கர், மாவட்ட இலக்கிய அணியை சேர்ந்த டி.ரவி, வி.வேதக்கண்ணு, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு அணியின் கே.கே.செந்தில்குமார். கவிஞர் வேல்முருகன் கழக வழக்கறிஞர்கள் ஜி.விஜயகுமார் எஸ். மோகன்ராஜ், பிற அணிகளை சேர்ந்த பாண்டுரங்கன், கேசவன், கே.கே.சிட்டிபாபு, சிவகாமி பாண்டியன்.ஜில்லா வெங்கடேசன், மற்றும் கவிதா சிதம்பரம் லத்தேரி எம். சிவக்குமார், கவன்சிலர் வேலு, சி. மார்கபந்து, ஏ.பாரதி வி.எத்திராசன், டி.எஸ். பத்மநாபன், டி. மேகநாதன், சி. மதியழகன். பி.ஏ.டி.சி. முருகேசன், வீரா குமரன், சூரிய சுடர் வெங்கடேசன், இளைஞர் அணி ஏ.வி.எம்.பிரபு, மோகன், முரளி, சிரிதர், ஜெயவேலு மாணவரணி, கே. சிரிதர், பி.விஜய், எம்.சிவக்குமார், என். சுந்தரம், என்.எஸ். ரமேஷ் சுடலைமணி, வேப்பனேரி இரவி, பிரபு, ஜெயக்குமார், கோபிநாத், புண்ணியமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முடிவில் ஜெ.விவேகானந்தன் நன்றி கூறினார். கூட்டத்திற்கான ஏற்பாட்டினை, முரசொலி தமிழ் மன்றமும், மாவட்ட இலக்கிய அணியும் இணைந்து ஏற்பாடு செய்தது.

திருவள்ளூர் மாவட்டம் - பட்டாபிராம், இந்து கல்லூரியில் தனியார் வேலைவாய்ப்பு முகாம்!

தேர்வு செய்யப்பட்ட 1491 பேருக்கு பணி ஆணைகள்!

அமைச்சர்கள் ஆர்.காந்தி - சி.வெ.கணேசன் வழங்கினர்! ஆவடி சா.மு.நாசர் முன்னிலை!

திருவள்ளூர், ஆக.15- முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி, பட்டாபிராம், இந்து கல்லூரியில் 12.08.2023 அன்று நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 151 நிறுவனங்கள் பங்கு பெற்று தங்கள் நிறு வனத்தில் உள்ள காலி பணியிடங்களுக்கான நபர்களை தேர்வு செய்யும் பொருட்டு நடத்தப்பட்ட பல்வேறு தேர்வு முறைகளில் தேர்ச்சி பெற்று தேர்வு செய்யப்பட்ட 1491 நபர்களுக்குகைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி. வெ.கணேசன் ஆகியோர் பணி ஆணைகளை முன்னாள் அமைச்சர்/ஆவடி சட்டமன்ற உறுப்பினர் சா.மு.நாசர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் ஆகியோர் முன்னிலையில் வழங்கி வாழ்த்து தெரிவித்தனர். தேர்வு செய்யப்பட்ட 1491 நபர்களில் ஆண்கள் 138 நபர்களும், பெண்கள் 69 நபர்களும், 6 மாற்றுத்திறனாளிகள் உட்பட 213 நபர்களுக்கு நேரடி பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இதர 1278 நபர்கள் இரண்டாம் கட்ட தேர்வுக்காக தேர்வு செய்யப்பட்டு இரண்டாம் கட்ட தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக, ஆவடி மாநகராட்சி, பட்டாபிராம் இந்து கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் ஆகியோர் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, இம்மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அதனை தொடர்ந்து, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுத்தரும் வகையில் 100 வேலை வாய்ப்பு முகாம்களை நடத்துமாறு தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டார்கள். தமிழ்நாடு முழுவதும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை வாயிலாக வேலைவாய்ப்பு முகாம்கள் நடை பெற்று வருகிறது. இன்று தமிழ்நாடு முழுவதும் 9 இடங்களில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடைபெற்று வருகின்றன. தற்போது, திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வழிகாட்டு மையம் சார்பில்,ஆவடி இந்து கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெறுகிறது.

வேலைவாய்ப்பு முகாமில் கலந்துகொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். முதல் வேலைவாய்ப்பு முகாமினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் கடந்த 22.7.2023 அன்று சென்னை, மாநிலக் கல்லூரியில் துவக்கி வைத்தார். இதுவரை, தமிழ் நாட்டில் பல்வேறு பகுதிகளில் 100க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. இதில், சுமார் 1.54 லட்சம் பேருக்கு தனியார் துறை மூலம் வேலை வாய்ப்புகள் பெற்றுத் தரப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவை போற்றும் வகையில் வருகிற டிசம்பர் மாதத்திற்குள் 100 இடங்களில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடைபெற உள்ளது. இன்று நடைபெற்ற இந்த முகாமில் மொத்தம் 7300 நபர்கள் பங்கேற்றத்தில் 6 மாற்றுத்திறனாளிகள் உட்பட 213 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு 1278 பேர் இரண்டாம் கட்ட தேர்வுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முகாமில் தேர்ச்சி பெறாதவர்களுக்கும் அடுத்த முறை பல்வேறு வாய்ப்புகள் வழங்கப்படும் அதனையும் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுங்கள். தொடர்ந்து முயற்சி செய்யுங்கள் நிச்சயம் நீங்கள் விரும்பும் ஊதியத்தில் உங்களுக்கான வேலை கிடைக்கும். உங்களுக்கான முயற்சி மட்டும் கைவிடாதீர்கள். தொடர்ந்து முயற்சி செய்யுங்கள் வெற்றி நிச்சயம்!

இவ்வாறு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, இம்மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்ட 1000 நபர்களுக்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சார்பாக பிளாஸ்டிக் ஒழிப்பை வலியுறுத்தியும் சுற்றுச்சூழலை பாதுகாத்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் 1000 மஞ்சப்பைகளைகைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ,தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் ஆகியோர் முன்னாள் அமைச்சர்/ ஆவடி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் முன்னிலை யில் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்வுகளில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ண சாமி, ஆவடி மாநகராட்சி ஆணையர் தர்ப்பகராஜ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் என்.ஓ.சுகபுத்ரா, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய செயற்பொறியாளர் ரவிச்சந்திரன், வேலை வாய்ப்பு துறை மண்டல இணை இயக்குநர் திருமதி. ஆ.ஜோதிமணி, உதவி இயக்குநர் திருமதி.விஜயா, தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி.மலர்விழி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய உதவி பொறியாளர் சபரி, இந்து கல்லூரி முதல்வர் முனைவர்.ஜி.கல்விக்கரசி, உள்ளாட்சிப் பிரதிநிதிகள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு! சைதை கிழக்கு பகுதியில்

மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அடையாள அட்டை பெற விழிப்புணர்வு கூட்டம்!

பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி.அறிவிப்பு!

சென்னை, ஆக.15- சைதை கிழக்குப் பகுதிக் கழக நிர்வாகிகளுக்குபகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு: -

சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தலின் படி, நாளை (16.08.2023 புதன்கிழமை) மாலை 6.00 மணியளவில் சைதை கிழக்கு பகுதிக் கழக அலுவலகத்தில் பகுதி அவைத் தலைவர் இ. முருகேசன் தலைமையில் சைதை கிழக்கு பகுதியில் உள்ள பயனாளிகளுக்கு முதலமைச்சர் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டை வாங்கி தருவது குறித்து தெளிவுரை நிகழ்த்த அரசின் சார்பில் அதிகாரிகள் பங்கேற்று, விளக்க உரை நிகழ்த்தும் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

எனவே சைதை கிழக்கு பகுதியில் உள்ள கழக தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள் (BLA2), தக வல் தொழில்நுட்ப அணியின் மாவட்ட, தொகுதி, பகுதி, வட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் குறித்த நேரத்தில் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சைதை கிழக்கு பகுதி செயலாளரும் 13 வது மண்டலகுழு தலைவருமான இரா.துரைராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

தி.மு.க. மாநில கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

தி.மு.க. கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம், திருச்சி மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் அறிவாலயத்தில்" 24.8.2023 வியாழக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில், எனது தலைமையில், துணைத் தலைவர்கள் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், எம்.பி., எம்.ஆர். ஆர்.வாசுவிக்ரம் செயலாளர்கள் மா.உமாபதி, அர.திருவிடம், இறையன்பன் குத்தூஸ், வண்ணை அரங்கநாதன், என்.தில்லைசெல்வம் துணைச்செயலாளர்கள் சி.வீராகணேசன், கவிஞர் நன்மாறன், எழில்மாறன், மீனா ஜெயக்குமார், சி.கோபி, ஜாகிர் உசேன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்

பொருள் : தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தபடி, தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி, தமிழ்நாடு முழுவதும் தலைவர் கலைஞர் அவர்கள் திரைக்கதை வசனம் எழுதிய திரைப்படங்களை மாவட்டந்தோறும் காட்சிப்படுத்துதல் மற்றும் கலைஞர் எழுதிய திரைப்பட வசனங்கள் மற்றும் கவிதை ஒப்பித்தல் போட்டிகள் நடத்துவது - குறித்து.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600018
நாள்- 14.8.2023

வாகை சந்திரசேகர்
தலைவர்
கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சாதனைகளின் முழக்கங்களோடு 10,000 க்கும் மேற்பட்ட மகளிர் பங்கேற்ற மாபெரும் எழுச்சிப் பேரணி கடலூரில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைக்கிணங்க, கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் ஏற்பாட்டில், லீமா ஐயப்பன் தலைமையில் மாமன்ற உறுப்பினர்கள் கீதா குணசேகரன், சுமதி ரங்கநாதன், மகேஸ்வரி விஜயன், ராதிகா பிரேம்குமார், கீர்த்தனா ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் டாக்டர் பிரவீன் ஐய்யப்பன் வரவேற்புரையில் நடைபெற்றது.

முதல்வரின் முயற்சியால்

தனியார் துறைகளில் 1 லட்சத்து 50 ஆயிரம் நபர்களுக்கு வேலை!

அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருப்பத்தூர், ஆக. 15 - தமிழ்நாடு முதல்வரின் முயற்சியால் தனியார் துறைகளில் 1 லட்சத்து 50 ஆயிரம் நபர்களுக்கு வேலை கிடைத்துள்ளது என்று பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் அமைச்சர் எ.வ.வேலு புள்ளி விவரங்களுடன் பேசினார்.

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஆதியூர் பொதிகை பொறியியல் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையம் மற்றும் தமிழ்நாடு ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார்துறை வேலை வாய்ப்பு முகாமில் 263 நபர்களுக்கு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இம்முகாமிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கரபாண்டியன். தலைமை வகித்தார். தொடர்ந்து இம்முகாமிற்கு திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, மாவட்டச் செயலாளர் - ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி, திருப்பத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் அ. நல்லதம்பி, ஆம்பூர் சட்ட மன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பணிக்கான ஆணைகளை வழங்கி பேசியதாவது:-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களில் பெரிய அளவில் வேலைவாய்ப்பு முகாம் நடத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, பல் வேறு மாவட்டங்களில் இந்த நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் மாநிலம் முழுவதும் எடுத்துக் கொண்டால் 100 க்கும் பெரிய அளவிலான நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம் களில் 16,477 நிறுவனங்கள் பங்கு பெற்றது, அதில் 6,74,962 நபர்கள் பங்கேற்று, 1,18,491 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது.

அதிலும் குறிப்பாக 912 மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது. மேலும் 1052 சிறிய அளவில் முகாம்கள் நடத்தப்பட்டு, 12,258 நிறுவனங்கள் பங்கேற்று, 1,43,992 நபர்கள் நேரடியாக கலந்து கொண்டு, அதில் 36,060 நபர்கள் வேலைவாய்ப்பு பெற்று இருக்கிறார்கள். அதில் குறிப்பாக 1502 மாற்றுத்திறனாளிகளுக்கு பணி கிடைத்திருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்று வேலைவாய்ப்பு முகாம்கள் மூலமாக 1,50,000 நபர்களுக்கு தனியார் துறை நிறுவனங்களில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

2670 பேருக்கு வேலை வழங்கப்பட்டிருக்கிறது!

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு 100 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, 09.08.2023 அன்று வரை ஒன்பது வேலைவாய்ப்பு முகங்கள் நடைபெற்றதில் 4,551 பணியிடங்களுக்கு 20,698 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதில் 37 மாற்றுத்திறனாளிகள் என்று சொன்னால் அது மிகை ஆகாது. அந்த வகையில் நமது திருப்பத்தூர் மாவட்டத்தில் சென்ற முறை இதே வளாகத்தில் நடைபெற்றதன் அடிப்படையில், மூன்று பெரிய முகாம் மூலமாக 327 நிறுவனங்கள் பங்கேற்றன,12,425 நபர்கள் பங்கேற்று, 2670 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

அதில் குறிப்பாக 27 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு பணி வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் 46 சிறிய அளவிலான முகாம் மூலமாக நமது மாவட்டத்தில் 304 நிறுவனங்கள் பங்கேற்று, அதில் 6432 நபர்கள் கலந்து கொண்டு, 1751 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் தான் இன்றைய தினம் வேலைவாய்ப்பு முகாம் மூலம் பல்வேறு தொழில் நிறுவனங்களின் மூலமாக வேலை வாய்ப்பு அளிப்பதற்காக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதிலே பல தொழிற்சாலைகளுக்கு, தொழில் வல்லுநர்கள் நடத்துகின்ற தொழில் நிறுவனங்களுக்கு வேலை வாய்ப்பு பெறுகின்ற பணியிலே தமிழ்நாடு அரசு ஈடுபட்டிருக்கின்றது.

முதலமைச்சர் அவர்கள் பட்டதாரிகளுக்கு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கி தர வேண்டும் என்ற அடிப்படையில் தான் தனியார் நிறுவனங்களை ஈடுபடுத்த வேண்டும் என்ற அடிப்படையில் தான் இத்திட்டத்தை அரசு பொறுப்பேற்றவுடன் ஆரம்பித்தார்கள்.

அதன் அடிப்படையில் தான் பல்வேறு இடங்களில் தனியார் துறைகளின் மூலமாக படித்த பட்டதாரிகளுக்கு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறுகிறது. படித்து முடித்தவுடன் அரசு வேலைக்கு தான் செல்ல வேண்டும் என்று சொன்னால் அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்க முடியாது. அரசு வேலை என்று சொன்னால் அரசு போடுகின்ற திட்டங்கள் அனைத்தும் மக்களிடத்தில் கொண்டு சென்று நடைமுறைப்படுத்துகின்ற பணியில் தான் அரசு வேலைகள் இருக்கும்.

அனைவருக்கும் வேலை வாய்ப்பு!

அரசின் மூலமாக ஒரு ஆண்டிற்கு போடப்படுகின்ற நிதியின் மூலமாக அனைத்து துறைகளும் இயங்குகின்றது. அரசாங்கம் மூலமாக அத்தனை பேருக்கும் வேலை வாய்ப்பு தர முடியாது என்று அரசாங்கம் கருதிய காரணத்தினால் தான் முதலமைச்சர் அவர்கள் தனியார் துறைகளை இணைத்துக் கொண்டு அனை வருக்கும் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள்.

இந்த வகையில் தான் தனியார் துறைகளின் மூலமாக ஏறத்தாழ 1 லட்சத்து 50 ஆயிரம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது. எனவே இந்த வேலை வாய்ப்பை பெறுகிறவர்கள் தகுதி அடிப்படையில் பணியாற்றினாலும் கூட, அரசு வேலைக்கு அல்லது மேற்படிப்பிற்கு நீங்கள் முயற்சி செய்யலாம். இன்று வேலை வாய்ப்பு பெறுகின்ற நபர்கள் பணிகளை மேற்கொள்கிறவர்கள் எங்கு செல்கிறார்களோ அங்கு திறம்பட திறமையை வெளிப்படுத்துகிற பொழுது உங்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்படும். எனவே இன்றைய தினம் வேலைவாய்ப்பு பெறுகின்ற அனைவருக்கும் என்னுடைய நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு தெரிவித்தார்.

பின்னர் வேலைவாய்ப்பு முகாமில் 1680 வேலைநாடுனர்கள் கலந்து கொண்டனர். இம் முகாமில் 103 நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களுக்குத் தேவையான இளைஞர்களை தேர்வு செய்தனர். வேலை வாய்ப்புக்கு தேர்வு பெற்றவர்களில் 183 ஆண்கள் மற்றும் 2 மாற்றுத்திறனாளிகள், 78 பெண்கள் என ஆக மொத்தம் 263 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணையை பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வால் வழங் கப்பட்டது.

இம்முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இ.வளர்மதி, மாவட்ட ஊராட்சி முகமை திட்ட இயக்குனர் செல்வராசு, மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), சேலம் திருமதி.ஆ.லதா, மாவட்ட ஊராட்சி தலைவர் என். கே.ஆர்.சூரிய குமார், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி. த.ரேவதி, அரசு துறை அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

மழைநீர் வெளியேற்றும் பணிகள்!

மேயர் ஆர்.பிரியா ஆய்வு!

சென்னை,ஆக.15- பெரம்பூர் சுரங்கப்பாதையில் மேற்கொள்ளப்பட்ட மழைநீர் வெளியேற்றும் பணியினை மேயர் திருமதி ஆர். பிரியா நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு71க்குட்பட்ட பெரம்பூர் சுரங்கப்பாதையில் மழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட மழைநீர் வெளியேற்றும் பணியினை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (14.08.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். சுரங்கப்பாதைகளில் மழைநீர் வெளியேற்றும் வகையில் மோட்டார் பம்புகளை தயார்நிலையில் வைத்திடவும், சுரங்கப்பாதைகளில் நீர் செல்லும் பாதையில் வண்டல்கள் மற்றும் கழிவுகள் தேக்கமில்லாமல் சுத்தம் செய்து மழைநீர் எளிதில் செல்ல வழிவகை செய்திடவும், விடுபட்ட மழைநீர் வடிகால்களை விரைவில் அமைத்திடவும், மழையினை எதிர்கொண்டு விழிப்பு ணர்வுடன் பணியாற்றிடவும் அலுவலர்களுக்கு மேயர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் திருமதி புனிதவதி எத்திராஜன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு71க்குட்பட்ட பெரம்பூர் சுரங்கப்பாதையில் மேற்கொள்ளப்பட்ட மழைநீர் வெளியேற்றும் பணியினை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (14.08.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார் அவர்கள், மாமன்ற உறுப்பினர் திருமதி புனிதவதி எத்திராஜன் உட்பட பலர் உடனிருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கம்மராசபுரம் கே.எம்.இராஜகோபால்

ஆகஸ்ட் 15 (1980)

தனது 16வது வயதிலேயே திராவிடர் கழகத்தில் இணைந்து, தொடர்ந்து அண்ணாவின் தலைமையை ஏற்று கழகத்தில் தீவிரமாக பணியாற்றி தமிழகமெங்கும் சுற்றி மூடநம்பிக்கை எதிர்ப்பு பிரச்சாரம் செய்தவர்.

அண்ணாவின் 'நீதிதேவன் மயக்கம்' நாடகத்தில் இராவணன் வேடமேற்று நடித்தவர்.

உழவர் குத்தகை உரிமை – இந்தி எதிர்ப்பு – சட்ட எரிப்பு – விலைவாசி உயர்வு எதிர்ப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் களம் புகுந்து சிறை சென்றவர்.

1965ல் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் – 1976ல் மிசா சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.

உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறையும் – காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் – கம்மராசபுரம் ஊராட்சி மன்றத் தலைவராக மறையும் வரை தொடர்ந்து பொறுப்பில் இருந்தவர்.

காஞ்சிபுரம் வட்டக் கிளைச் செயலாளர் – செங்கல்பட்டு மாவட்ட செயற்குழு உறுப்பினர் – தலைமைச்செயற்குழு, பொது